

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 29-06-2023


# ஆமாம்! அந்த ஸ்டாலின்தான்!

பாட்னாவில் ஏற்பட்ட அகில இந்தியக் கட்சிகளின் ஒற்றுமை என்பது மகத்தான சாதனைதான் என்பதை பா.ஜ.க.வின் பய அலறலைப் பார்த்தாலே உணர முடிகிறது!

'அவர்கள் சேர்ந்தே இருக்க மாட்டார்கள்' என்று சொல்லி தனக்குத் தானே மனதைத் தேற்றிக் கொள்கிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா. 'காங்கிரசை ஒரு காலத்தில் எதிர்த்தவர்கள் எல்லோரும் காங்கிரசுடன் கைகோர்த் துள்ளார்கள்” என்று நடுங்குகிறார் பா.ஜ.க. தலைவர் நட்டா.

**ராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங்குக்கு 'ஸ்டாலின்' என்ற பெயரே பயமுறுத்துவதாக அமைந்துள்ளது.**

**“ஸ்டாலின் என்பது ரஷ்ய சர்வாதிகாரத்தின் பெயர். அதேபோல் சர்வாதிகாரத்தை ஸ்டாலின் செய்கிறார்” என்கிறார் ராஜ்நாத்சிங். மிரண்ட கண்ணுக்கு இருண்ட தெல்லாம் பேய் என்பதைப் போல இவர்கள் பேசிக் கொள்கிறார்கள். ஸ்டாலின் என்ற பெயர் ஹிட்லர்களை வீழ்த்திய பெயர் என்பதால் ராஜ்நாத்சிங்குகள் பயம் கொள்வதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.**

ரஷ்ய அதிபர் ஸ்டாலின் சாதனைகளாக இவை பட்டியலிடப்படுகின்றன.

- **மார்க்சியம் - லெனினியம் என்ற தத்துவத்தைக் காத்து நின்றார்.**
- **தாய்மொழி தேசிய இனப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.**
- **முதலாளித்துவத்துக்கு சோவியத்தில் முடிவு கட்டினார்.**
- **சோசலிச ஆட்சி முறையே முதலாளித் துவத்துக்கு மாற்று என்பதை நிரூபித்தார்.**
- **உலகில் முதலாவதும் மிகப் பெரியதுமான கூட்டுப்பண்ணைகளை உருவாக்கினார்.**
- **சோவியத்தை மாபெரும் தொழில் வல்லரசு ஆக்கினார்.**
- **வேலைக்கு உத்தரவாதம், அனைத்து குடிமக்களுக்கும் சமூக பாதுகாப்பு, எழுத்தறிவின்மை முழுமையாக நீக்கம் ஆகியவற்றைச் செய்து காட்டினார்.**
- **இரண்டாம் உலகப் போரின் போது சோவியத் வெற்றி பெற வழிகாட்டினார்.**
- **கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகளை உருவாக்கினார்.**
- **வெளிநாடுகளில் நடந்த பாட்டாளி வர்க்க போராட்டங்களை ஆதரித்தார்.**
- **ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக இருந்தார்.**

- இவைதான் ரஷ்ய அதிபர் ஸ்டாலினின் சாதனைகள் ஆகும்.

இவை எதுவும் ராஜ்நாத் சிங் கண்ணுக்குத் தெரிய வில்லை. பிற்போக்கு வாதிகளின் கண்ணுக்கு அப்படித்தான் தெரியும். புரட்சியாளர்களையும், சீர்திருத்த எண்ணம் கொண்டவர்களையும் இப்படித்தான் பிற்போக்குவாதிகள் காலம் காலமாக கொச்சைப்படுத்தி வந்துள்ளார்கள்.

“விவசாயிகளுக்கு நிலம், உழைக்கும் வர்க்கத்துக்கு பாதுகாப்பு, ரஷ்யாவின் அனைத்துக் குடிமக்களுக்கும் ஜனநாயகக் குடியரசு” என்று அறிவித்தார் ரஷ்ய அதிபர். அதைச் செய்தும் காட்டினார்.

ஐந்தாண்டுத் திட்டங்களை அறிமுகம் செய்து சோவியத்தை மீட்டெடுத்தது ஸ்டாலினின் சாதனையாகும். முதலாளித்துவ நாடுகள் தொழில் வீழ்ச்சியில் இருந்தபோது, 1920களின் இறுதியில் சோவியத் பொருளாதாரம் மட்டும் இரண்டு மடங்கு வளர்ச்சியைக் கண்டது. அனைத்துத் தொழில்களும் வளர்ச்சியைக் கண்டது.

1932 ஆம் ஆண்டின் இறுதியில் சோவியத் தொழில் துறை 334 விழுக்காடு வளர்ச்சியை பெற்றிருந்தது. அமெரிக்கா 84 விழுக்காட்டிலும், இங்கிலாந்து 74 விழுக்காட்டிலும் இருந்தன. தானிய உற்பத்தி பொங்கி எழுந்தது. **பின்தங்கிய விவசாய நாடாக இருந்த ரஷ்யாவை முன்னணி தொழில் வளர்ச்சி நாடாக மாற்றியது தான் ஸ்டாலினின் சாதனையாகும். இந்த சாதனைகளை ஒப்புக் கொள்ள மறுப்பவர்கள், ரஷ்ய அதிபரை சர்வாதிகாரி என்று குறை சொல்லத்தான் செய்வார்கள். சோசலிசத்தின் சாதனைகளை, இதுபோன்ற பொய்களின் மூலமாக நிராகரிப்பார்கள்.**

பாட்டாளி வர்க்கமே ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கும் அரசதிகாரமாக அது இருந்தாலும், வேற்றுமைக்கு உரிய மரியாதை கொடுக்கும் கட்டமைப்பை ரஷ்யாவில் லெனினும் ஸ்டாலினும் வழிமொழிந்தார்கள். ரஷ்ய மக்களின் சமத்துவம் மற்றும் இறையாண்மை, பிரிந்து சென்று சுதந்திர அரசு அமைக்கும் அளவுக்கு ரஷ்ய மக்களுக்கு தேசிய சுயநிர்ணய உரிமை, சிறப்புரிமைகள் நீக்கம், தேசிய சிறுபான்மையினருக்கும் இனக்குழு வினருக்கும் சுதந்திரமான வளர்ச்சி என்று அறிவிக்கப் பட்டது. தேசிய இனங்களுக்கான தனி அமைச்சரே இருந்தார் ரஷ்யாவில். ஸ்டாலினே சில காலம் அந்த அமைச்சராகவும் இருந்தார். மகா ரஷ்ய தேசிய வெறியைக் கண்டிப்பதில் முதல் ஆளாக இருந்தார் ஸ்டாலின். இவையே ஸ்டாலினிசத்தின் சர்வதேச அடையாளங்கள் ஆகும். சர்வாதிகாரி என்ற ஒற்றைச் சொல்லின் மூலமாக இவற்றை எல்லாம் மறைக்கப் பார்க்கிறார் ராஜ்நாத் சிங்.

காங்கிரசுடன் சேர்வதையும், ஒரு காலத்தில் காங்கிரசுக்கு எதிராக அணி சேர்ந்தவர்கள் இன்று அதனையும் இணைத்துக் கொள்கிறார்களே என்றும் குறை சொல்கிறது பா.ஜ.க. அதற்கும் ரஷ்ய அதிபர் ஸ்டாலின் பதில் அளித்துள்ளார்.

உலக அரசியலில் தங்களது மேலாதிக்கத்தை நிலைநாட்ட ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் தீர்மானித்த போது அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து நாடுகளுடன் இணைந்து அவர்களை வீழ்த்த வழி காட்டியவர்தான் ரஷ்ய அதிபர் ஸ்டாலின் ஆவார். நாடுகளையேகூட ஜன நாயக ஏகாதிபத்தியம் பாசிச ஏகாதிபத்தியம் என்று பிரித்துச் சொன்னவர் அவர்தான். 'எந்த இரண்டும் ஒன்றல்ல, எதிலும் முதன்மை தரத்தக்கது ஒன்றுண்டு' என்று சொன்னவர் அவரே. “எதிரி மிகக் கொடூரமாக சோவியத்தை அழிக்க முனைகிறார்; சோவியத் தேசிய இனங்களை அழித்து ஜெர்மன் இளவரசர்களின் அடிமையாக மாற்ற நினைக்கிறார்” என்றார் அன்றைய ஸ்டாலின்.

**இதோ இன்றைய நிலைமைக்கு எதிராக பாட்னா அணிச் சேர்க்கையானது இத்தகைய எச்சரிக்கையைத்தான் இந்தியாவுக்குத் தந்துள்ளது. ஒற்றைத் தன்மை கொண்ட நாட்டை உருவாக்கி ஒரு மனிதக் குடையின் கீழ் இந்திய ஜனநாயகத்துக்கான முடிவுரையை எழுத நினைப்பவர்களுக்கு முடிவுரை தீட்டப்படவேண்டும்.**

**இதற்கான தொடக்கத்தை பாட்னா விதைத்து விட்டது. அதனால்தான் நட்டாவும், அமித்ஷாவும், ராஜ்நாத்சிங்கும் அலறுகிறார்கள். அவர்களுக்கு பாசிசவாதிகளை வீழ்த்திய ஸ்டாலினாகவே இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் தெரிகிறார். ஆமாம்! அது உண்மை தான்!**



கரூர் மாவட்ட திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் கரூர் 80 அடி சாலையில் நடைபெற்றது. நாஞ்சில் சம்பத், தலைமைக் கழக பேச்சாளர் சைதை சாதிக் சிறப்புரையாற்றினர். பொதுக்கூட்டத்தில் உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிசாமி, நன்னியூர் ராஜேந்திரன், பரணி கே.மணி, சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம், பி.ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கானோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### கே.சி.பழனிசாமி - நன்னியூர் ராஜேந்திரன் - நிர்வாகிகள் பங்கேற்பு!

# கரூரில் பிரமாண்ட பொதுக்கூட்டம்!

## நாஞ்சில் சம்பத் - சைதை சாதிக் சிறப்புரை!

கரூர், ஜுன் 29-

முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவையொட்டி கரூரில் பிரமாண்ட பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க கரூர் மாவட்ட திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் கரூர் 80 அடி சாலையில் நடைபெற்றது. நாஞ்சில் சம்பத் சைதை சாதிக் சிறப்புரையாற்றினர். நாஞ்சில் சம்பத் பேசுகையில்:-

தங்களுக்கு ஆகாதவர்கள் மீதெல்லாம் அமலாக்கத் துறையை ஏவி அடக்க நினைக்கிறார்கள். ஒத்திகை பார்ப்பதற்காக அமைச்சர் செந்தில் பாலாஜியை தொட்டு இருக்கிறார்கள். பா.ஜ.க.வின் இந்த விளையாட்டானது தமிழ்நாட்டில் எடுபடாது. இரண்டு மாதத்தில் விசாரித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பதுதான் நீதிமன்ற உத்தரவு ஆனால் மதில் ஏறி குதிக்க என்ன நிர்பந்தம்?. வழக்கறிஞர்களை அனுமதிக்க என்ன தடை இருந்தது. அமலாக்கத்துறை அரசியல் செய்யலாமா? மருத்துவர்கள் உறுதி அளித்த பின்பும் எதிர்ப்பு தெரிவிப்பது ஏன்?. எட்டு வருடத்திற்கு முந்தைய வழக்கு இது. கழகத்தினர் கவலைப்பட வேண்டாம் அகில இந்திய அரசியலில் பரபரப்பாக பேசப்படுபவராக செந்தில் பாலாஜி ஆகியுள்ளார்.

ராகுல் காந்தி எம்.பி. பதவியையே பறித்தனர். சிறை தண்டனை விதித்தனர். எப்படிப்பட்ட வசதியான குடும்பத்தில் பிறந்தவரை அரசு வீட்டை காலி செய்ய உத்தரவிட்டனர். நேரு குடும்பத்தினரை சித்திரவதை செய்கிறார்கள் என்றால் கிராமத்தில் பிறந்த செந்தில் பாலாஜியிடம் நியாயமாக நடப்பார்களா?.

அவதூறுகளை அள்ளி வீசுகிறார்கள். அத்தனையையும் முறியடித்து வருவார் அவர். இந்தியாவின் பொதுத் துறையை சீரழித்துள்ளனர். கார்ப்பரேட்களுக்கு ஆதரவாக ஒன்றிய அரசு செயல்படுகிறது. இவர்களது வீழ்ச்சி தளபதியின் கையில் இருக்கிறது. அதனை பாட்னா வழிமொழிந்து விட்டது. நமது தலைவர் முன்மொழிந்ததை நாடு வழி மொழியும். என்றார்.

கரூர் மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ் வரவேற்று பேசினார்.

கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் கே.சி. பழனிசாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத் துறை இணைச் செயலாளர் என். மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம், பி.ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மாநில நிர்வாகிகள் கரூர் முரளி, முனவர் ஜான், வே.பல்லவி ராஜா, பி.விஜயகுமார், கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், மாவட்ட கழக நிர்வாகிகள் டி.ராஜேந்திரன், எம்.எஸ்.கருணாநிதி, பூவை ரமேஷ் பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, வி.பாரத், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் குளித்தலை ஏ. சிவராமன், சுப.ராஜகோபால், காலனி செந்தில், ஆண்டாள் பாலகுருபரன், எம் துரைராஜ், சாலை கே.சுப்பிரமணி, என்.செல்வராஜ், பகுதி கழகச் செயலாளர்கள் கரூர் கணேசன், கே. சுப்பிரமணியன், கா.அன்பரசன், கோல்ட் ஸ்பாட் ஆர்.எஸ். ராஜா, ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம்.எஸ்.மணியன், கே.கருணாநிதி, எம். ரகுநாதன், அ. சந்திரன், கே.ரவி.ராஜா, ஜி.அண்ணாதுரை, கே.பாஸ்கரன், எம் ராமலிங்கம், எஸ்.சுதாகர், என் மணிகண்டன், கார்த்திக், சி.வளர்மதி, எல்.கரிகாலன், ப.தியாகராஜன், ப.முத்துக்குமார், வி.கே. வேலுச்சாமி. சி.கதிரவன், புகழூர் அ. குணசேகரன், வாசிம் ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் என்.எஸ். ஆறுமுகம், வி.கருப்பண்ணன், கே.வேலுச்சாமி, வி.கே. டி.ராஜ்கண்ணு, கே. சாமிநாதன், சி.கருப்பையா, பி. சரவணன், இ.ஜாபருல்லா, சிவகாமி சண்முகம், எஸ் காளியப்பன், எம்.சிவசாமி, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், என்.ராமலிங்கம், சிவகாமசுந்தரி, பி.ஏ.குமார், பேரூர் கழக செயலாளர்கள் கே. அம்மையப்பன், கே.முரளி ராஜா, இ.ரவீந்திரன், ஆர். மோகன்ராஜ், எம்.சசிகுமார், எம்.முத்து, சி.தங்கராஜ்,

அணி அமைப்பாளர்கள் எஸ்.சக்திவேல், ஜிம்.எம். சிவா, கலாவதி சக்திவேல், ஜே. பிரின்சி, இரா குடியரசு, பழ.அப்பாசாமி, தென்னிலை பாலு, பி.சங்கர், புலவர் அருணா பொன்னுசாமி, பாக்கிய ரகுபதி, ஆர்.ஜோதி பாசு, பி.மோகனசுப்பு, சி நவாஸ்கான், ம.அம்பிகாபதி, தம்பி சுதாகர், வி.ஆர். அண்ணா வேலு, மாவட்ட ஊராட்சி குழுத் துணை தலைவர் தேன்மொழி தியாகராஜன், குளித்தலை நகர் மன்ற தலைவர் சகுந்தலா பல்லவி ராஜா, ஒன்றிய குழு தலைவர்கள் சிவகாமி வேலுச்சாமி, வள்ளியத்தாள் குருசாமி, சுமித்ரா தேவி ரவி ராஜா, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் அலமேலு மனோகரன், ஏ.கண்ணையன், நந்தினி தமிழ் செல்வன், நல்லமுத்து வடிவேல், பேரூராட்சி தலைவர்கள் எம்.ஜெயந்தி, மு. ரூபா, எஸ்.புவனேஸ்வரி, டி. திவ்யா, எம்.சௌந்தரபிரியா, சேது மணி மகாலிங்கம், சு. சகுந்தலா, எஸ்.ராஜேஸ்வரி, மாநகர கழக நிர்வாகிகள் கே.வி.தங்கவேல், எம். பாண்டியன், கே எஸ் அறிவின்ஸ், எம்.நிஷா, அங்கு பசுபதி, ஆர்.வெங்கடேஷ், கே.எம்.பாலகிருஷ்ணன், பி.சண்முகம், கே ஆர் சுந்தர் ராஜன், வி.ஜி.எஸ்.குமார், ஆரோக்கிய ஜெயபால், பி.பழனிவேல், ஜி.ஜீவரத்தினம், பி.சுப்பிரமணி, அக. இளமுருகு, பகுதி கழக நிர்வாகிகள் கே.எம்.பெரியசாமி, கே.செந்தில் சரவணன், வி.பி.என். ரஞ்சித்குமார், எஸ்.சாந்தி, ஆர்.லட்சுமணன், எஸ்.பிரபாகரன், எஸ்.சண்முகம், வி.கிரி வாசகன், ஒமேகா சுப்பிரமணி, எம்.சுப்பிரமணியம், எஸ். சரவணன், பொ.நாகராஜன், கீதா ராமச்சந்திரன், எஸ். ஜெகநாதன், ஆர்.ரமேஷ், வி. கார்த்திகேயன், எஸ். ரமேஷ், எஸ்.சரவணன், து. செந்தில்குமார், ஆர்.வி.ரங்கராஜ், பி. குமார், வி.மோகன் குமார் எம்.ராஜலிங்கம், வி. காமராஜ், பி.கார்த்திகேயன், பி.கந்தசாமி, சி.அருண்குமார், பி.ஆர்.கௌதம், டி.நாச்சிமுத்து, பரமசிவம், பி. ஏ. குமார், வள்ளி வேல்முருகன், எம்.பாலசுப்பிரமணியம், எஸ்.வடிவேல், எம். நாராயணன், ச.ஞானசேகரன், ஆர். மருதநாயகம், பி.சந்துரு, சே.ராமலிங்கம், ரவிச்சந்திரன், பி கோபிநாத் இ.முத்துலட்சுமி, சி.பாண்டியன், எம்.லதா, எஸ்.பாபுகுமார், கே.சுப்பிரமணியன், கே.பாலச்சந்திரன், எம்.தங்கராஜ், வி.வெங்கடாசலம், டி.ஜி.பி. வெங்கட்ராமன், எஸ்.செல்வி, பி.ரவிச்சந்திரன், பி.தங்கவேல், எம். கார்த்திகேயன், வி.சந்திரசேகர், எம்.தங்கராசு, கே. பி.சசிகுமார்,

கரூர் மாநகர வட்டக் கழக செயலாளர்கள் ஆர். குமரேசன், கே.வடிவேலரசு, பி.நாகராஜன், டி.நாச்சிமுத்து, பி.தங்கதுரை, கே. பாலசுப்ரமணியம், பி சசிகுமார, ஏ. ராஜா, எம். சண்முகம், எஸ்.கார்த்திகேயன், கே. பழனிகுமார், பி. இளங்கோவன், பிதாமோதரன், எம். நந்தகுமார், பிதங்கவேல், ஜெ.கிருஷ்ணன், பசுவை சக்திவேல், எஸ்.லோகநாதன், டி.மதியழகன், ஏ.லாரன்ஸ், எம். ஜாகிர் உசேன், ஏ. மகேஸ்வரன், எஸ். சதீஷ்குமார், பி.சக்திவேல், ஆர். சண்முகசுந்தரம், சாலை ரமேஷ், எஸ்.ரமேஷ் குமார், என்.மணிகண்டன், கே.ஜெயராமன், டி.கார்த்திகேயன், எம்.கோவிந்தராஜ், எஸ் அன்பு ரத்தினம், ஜி கிருஷ்ணமூர்த்தி, எம்.ராமலிங்கம், கே.சிவக்குமார், வி. செல்வராஜ், ஹசன் நவாஸ், எஸ்.முருகானந்தம், ஆர். விக்னேஷ், பி.செந்தில்குமார், ஏ.விஸ்வநாத், கார்த்திக் குமார், ரமேஷ் அம்பிகாபதி, சுரேஷ்குமார், எம். ராஜேந்திரன், சரவணன், ராமசாமி, வினோத்,

மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் எம்.சரவணன், எஸ்.மாரியம்மாள், ஏ. பூங்கோதை, ஜி.ராஜேஸ்வரி, என்.ரஞ்சித்குமார், சி. சரண்யா, ஆர் தியாகராஜன், பி. பூபதி, எம்.தங்கராசு, க. அருள்மணி, வி.நந்தினி, எஸ். பிரேமா, எஸ்.வளர்மதி, எஸ்.நிர்மலா தேவி, ர.தேவி, எம்சுகந்தினி, ஆர்.புவனேஸ்வரி, எஸ்.யசோதா, பி. சாந்தி, வி.நிவேதா, ஏ.பாலவித்யா, ஆர் தெய்வானை, எஸ்.இந்திராணி, வசுமதி பிரபு, பா.சூரியகலா, கே. சரஸ்வதி, ஏ.கயல்விழி, எஸ். மோகன்ராஜ், பி.பழனிச்சாமி, இரா.வேலுச்சாமி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம்

# குறைந்த விலையில் தக்காளி விற்க நடவடிக்கை!

## பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை! அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் எச்சரிக்கை!



சென்னை, ஜுன் 29-

தமிழ்நாட்டில் தக்காளி விலை ஏற்றத்தை கட்டுப்படுத்த கூட்டுறவுத்துறையின் மூலம் செயல்பட்டு வரும், பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் நகரும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் கொள்முதல் விலைக்கே தக்காளி விற்பனை செய்யப்பட்டு வருகிறது. விலையேற்றத்தை கருத்தில் கொண்டு தக்காளியை பதுக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு கோடையில் கடும் வெப்பம் நிலவியதால் விவசாயிகள் தக்காளி பயிரிடுவது கணிசமாக குறைந்ததாலும், அண்டை மாநிலங்களிலிருந்து தக்காளி வரத்து குறைந்ததாலும், கடந்த வாரம் முதல் தக்காளி விலை அதிகரித்துள்ளது. தோராயமாக நாள் ஒன்றுக்கு சென்னை, கோயம்பேடு மார்கெட்டிற்கு 800 டன் வரையிலான வரக்கூடிய தக்காளி வரத்து தற்போது 300 டன் என்ற அளவில் குறைந்துள்ளது. இதனால் வெளிச்சந்தைகளில் ஒரு கிலோ தக்காளியின் விலை ரூ.90 முதல் ரூ.100 வரை விற்கப்படுகிறது. இதனால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விலையேற்றத்தை கட்டுப்படுத்தும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, கூட்டுறவுத்துறையின் மூலம் சென்னையில் செயல்பட்டு வரும் 27 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் 2 நகரும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள், கோயம்புத்தூரில் செயல்பட்டு வரும் 10 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள், திருச்சியில் செயல்பட்டு வரும் 13 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் 1 நகரும் பண்ணை பசுமை நுகர்வோர் கடை, மதுரையில் செயல்பட்டு வரும் 4 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள்.

மேலும், தூத்துக்குடி, திருவண்ணாமலை, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருப்பூர், சேலம், ஈரோடு, வேலூர் ஆகிய மாவட்டங்களில் தலா 1 வீதம் செயல்பட்டு வரும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் என 62 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் 3 நகரும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் கொள்முதல் விலைக்கே தக்காளி விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளில் குறைந்தபட்சமாக தக்காளி விலை கிலோ ஒன்றுக்கு ரூ.68 முதல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த விலையானது வெளிச்சந்தையுடன் ஒப்பிடுகையில் ரூ.28 முதல் ரூ.32 வரை குறைவானதாகும். மேலும், பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளில் ரூ.60 முதல் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த விலையேற்றம் தற்காலிகமானதே விரைவில் தக்காளி விலையேற்றம் கட்டுப்படுத்தப்படும்.

எனவே, பொதுமக்கள் அனைவரும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் தக்காளி மற்றும் காய்கறிகளை வாங்கிப் பயன்பெறுமாறு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் கேட்டுக்கொண்டார்.